மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) ஆம். முதல் கட்டமாகிய நிலம் ஆர்ஜிதம் செய்ய ரூ. 36,42,500 பொறுமான மதிப்பீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி செயலில் உள்ளது.

தரமான சாலை அமைப்புப் பணியை உடனடியாக ஏற்க, மத்திய அரசின் அனுமதியும், நிதி ஒதுக்கீடும் எதிர்பார்க்கப் படுகிறது,

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : நெடுஞ்சாலை எண் 47-ல் கோவை—சென்னியம்பாளையம், இருகூர்—மதுக்கரை வழியாக எட்டிமலை வரை ஓடும் இந்த ரோடிற்கான வேலையைத் துரிதமாக எடுத்து முடிக்க இந்த அரசு உடனடியான நடவடிக்கை களை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்தவரை நில ஆர்ஜிதப் பணிக் காக ரூ. 36,42,500 செலவிட்டு இந்தப் பணி துவங்கப்பட்டது. மேற்கொண்டு வேலைகள் 2 மேம்பாலங்கள், ஆற்றின் குறுக்கே ஒரு பாலம், மேற்கொண்டு 7 சிறிய பாலங்கள் போட வேண்டிய பணி முதற்கொண்டு, மற்ற பணிகளுக்காக இரண்டு கோடிக்கு மேற்பட்ட பணம் தேவைப்படுகிறது. மத்திய அரசு நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்துள்ளது. எனவே, மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள்.

* வினா 459—திரு. எஸ். கணேசன், திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் எத்தனை ? அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாநிலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள 3 நூற்பாலைகள் நிதி நெருக்கடி காரணமாகவும் வேறு காரணங்களுக்காகவும் இயங்கவில்லை.

1. பத்மா ஆலை, கோயம்புத்தூர்.

2. தமிழ்நாடு நூற்பாலை, கோயம்புத்தூர்.

3. ராஜா ஆலை, மதுரை.